அசல்

34

1.8.1941. ராம. பழனியப்ப செட்டியார்.

அசல் -1

Pages 207-208 ... VOL ...

'இந்திரா'

(இனிய தமிழ் மாதப் பதிப்பு)

ஆசிரியர்:
ராம. பழனியப்ப செட்டியார்.

செட்டிநாடு,
இராமநாதபுரம் ஜில்லா.

திருவாளர் டாக்டர் உ.வே

சாமிநாதய்யரவர்கள்

திருவல்லிக்கேணி, சென்னை

உழுவலன்புடையீர்!

அண்ணாமலை சர்வகலாசாலையின் ஸ்தாபகரும், பல கல்வி ஸ்தாபனங்கட்கும், வைத்தியசாலைகட்கும், தமிழ் இலக்கிய ஸ்தாபனங்கட்கும் நன்கொடையளித்து ஆதரித்து வருபவருமான, ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கட்கு (28-9-41) ஷஷ்டியப்த பூர்த்தி சாந்திவிழா நடக்கவிருக்கிறது. அந்த விழாவை முன்னிட்டு, **"இந்திரா விசேஷ மலர்"** ஒன்று வெளியிட உத்தேசித்துள்ளோம். நல்ல ரசிக சிகாமணியும், தமிழ் நாட்டின் அருங்கொடையாளருமான **ராஜா சர்** அவர்களின் சாந்தி விழாவை தமிழ் நாட்டினரின் சார்பாக நாங்கள் ஒரு மலர் வெளியிடுவதன் மூலம் கொண்டாடத் தீர்மானித்திருப்பது குறித்துத் தாங்கள் மகிழ்ச்சியடைவீர்களென்றே நாங்கள் நம்புகின்றோம்.

இந்த மலர் 28—9—41 அன்று வெளிவரும். பெரிய அளவில் ஏராளமான பக்கங்களுடன் மலரும். இதில் **ராஜா சர்** அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் பற்றிய விஷயங்களையும், இலக்கியக் கட்டுரைகளையும், சில சிறு கதைகளையும், பாக்கள் சிலவற்றையும் வெளியிட உத்தேசம். இந்த மலருக்கு விஷயதானம் செய்யும்படி தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். தங்கள் வியாசத்தை 15—8—41க்குள் கிடைக்கும்படி அனுப்பவேண்டுகின்றோம். சிரமத்திற்கு மன்னிப்பீர்களென்று நம்புகின்றோம். தங்கள் ஆசியையும் அன்பையும் எதிர்பார்க்கும்,

தங்கள் அன்புள்ள,

AUG 1 1941

ராம. பழனியப்ப செட்டியார்

ஆசிரியர்.

அசல்

34

1.8.1941. ராம. பழனியப்ப செட்டியார்.

அசல் -1

Pages
207-208.
தி.க. V62
'K'

115